**2.111 ஊராட்சி ஒன்றிய பதிவுரு எழுத்தர்கள் ஊராட்சி பகுதிநேர/முழுநேர எழுத்தர்களை இளநிலை உதவியாளர் / காசாளர் பதவிகளில் பணி அமர்த்தல் – தேர்ந்தோர் பெயர் பட்டியல் அரசின் வழி மட்டும் தேர்வாணையத்திற்கு அனுப்புதல்**

---

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 298 நாள் : 3.10.1997

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறை அரசாணை 963 (ம) 964 நாள் 28.11.90
2. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் எண் 5490/சிடி–பி4/93 நாள்.24.10.95

**ஆணை**

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஊராட்சி வளர்ச்சி அலகில், இளநிலை உதவியாளர், ஊர்நல அலுவலர், காசாளர், தட்டச்சர் பதவிகளில் ஊராட்சி ஒன்றிய பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் ஊராட்சி பகுதிநேர முழுநேர எழுத்தர்களை பணி அமர்த்துவதற்கான தேர்ந்த பெயர் பட்டியல்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16 (பி) ன்படி தேர்வாணையத்தின் இசைவு பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி நேரடியாக தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்தனர். தேர்வாணையம் அவற்றை ஆய்வு செய்து இசைவு அளிக்கவோ, மறுக்கவோ முடிவுசெய்து வந்துள்ளது. தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்ட பணியிடங்களில் தவிர்க்க இயலாத சூழ்நிலையில் தேர்வாணையத்தின் மூலமாக அல்லாமல் பணி அமர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்குரிய கருத்துருக்களை தேர்வாணையத்திற்கு அனுப்பி இசைவு பெற வேண்டும். அவ்விதம் இசைவினை பெறுதவற்குரிய செயற்குறிப்புகளை தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16 (பி)ன்படி பிற்பகுதியின்படிதான் அனுப்ப வேண்டும். எனவே மாவட்ட ஆட்சியர்கள் தேர்வாணையத்திற்கு அனுப்பி இதுவரை இசைவு அளிக்கப்படாமல் இருக்கும் தகுதி வாய்ந்தோர் பட்டியல்களையும் இனிமேல்அனுப்பப்படும் பட்டியல்களையும் அரசின் மூலமாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்குமாறும் இதுவரை மாவட்ட ஆட்சியரிமிருந்து நேரடியாக பெற்ற பட்டியல்களுக்கு தேர்வாணையம் ஆய்வு செய்து இசைவு அளித்தமைக்கு பின்னேற்பு அளிக்குமாறும், தேர்வாணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

2. அரசு இது குறித்து நன்கு ஆய்வு செய்தபின் பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணைகள் படி மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து நேரடியாக வரப்பெற்ற தேர்ந்த பெயர் பட்டியல்களை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஏற்கனவே ஆய்வு செய்தமைக்கு பின்னேற்பு அளித்து ஆணையிடுகின்றது.

3. இனிமேல், மாவட்ட ஆட்சியர்கள் தேர்ந்த பெயர் பட்டியல்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு நேரடியாக அனுப்பக் கூடாது என்றும், அரசின் வழியாக மட்டுமே அனுப்ப வேண்டுமென்றும் அரசு ஆணையிடுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என்.நாராயண்**
அரசு செயலாளர்